# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 · இதழ் Issue : 153 · ஞாயிற்றுக்கிழமை Sunday · 30.08.2026 · பக்கங்கள் Pages:4 · ₹ 6 · ஈரோடு Erode


# அரசு பள்ளிகளில் காலை உணவுத் திட்டம் விரிவாக்கம்

## விருதுநகரில் 17ந்தேதி முதலமைச்சர் விஜய் தொடங்கி வைக்கிறார்



வருகிற செப்டம்பர் 17-ந்தேதி பெரியார் பிறந்த-நாளன்று மதிய உணவு திட்டத்தைதந்தபெருந்த-லைவர் காமராஜர் பிறந்த விருதுநகரில் இந்த திட்-டத்தின் விரிவாக்க தொடக்க விழா நடத்த முடிவு செய்யப்பட்டுள்-ளதாக கூறப்படுகிறது.

தமிழகத்தில் பெருந்த-லைவர் காமராஜர் ஆட்-சிக்காலத்தில் பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு திட்டம் அறிமுகப்படுத்தப்பட்-டது. பெரும் வரவேற்பை பெற்ற இத்திட்டம் அடுத்-தடுத்து வந்த தி.மு.க. மற்றும் அ.தி.மு.க. ஆட்-சிக்காலத்தில் விரிவாக்கம் செய்யப்-பட்டது.

இந்த நிலையில் கடந்த தி.மு.க.ஆட்சியில்தமிழ-கத்தில் உள்ள அனைத்து அரசு பள்ளிகளில் 1 முதல் 5-ம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாண-விகளுக்கு காலை உணவு திட்டத்தை அப்போதைய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின்தொடங்கி வைத்தார். இதன் மூலம் வாரத்தின் 5 நாட்களும் மாணவ, மாணவிக-ளுக்கு ரவா உப்புமா,ரவா கிச்சடி,வெண் பொங்கல், சேமியா கிச்சடி, ரவா கேசரி மற்றும் காய்கறி சாம்பார் வழங்கப்பட்-டது. இந்த திட்டத்திற்கு வரவேற்பு கிடைத்த நிலையில் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கும் இத்திட்டத்தை தி.மு.க. அரசு விரிவாக்கம் செய்-தது.

இந்தநிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டு முதல-மைச்சராக விஜய் பொறுப்பேற்ற நிலையில் காலைஉணவுதிட்டத்தை 'பெருந்தலைவர் காமரா-ஜர் காலை உணவு திட்-டம்' என பெயர் மாற்றம் செய்யப்பட்டது. மேலும் இந்ததிட்டம் 1 முதல் 8-ம் வகுப்பு வரை பயிலும் மாணவர்களுக்கு விரி-வுப்படுத்தப்படும் என தமிழக அரசு அறிவித்-தது. இதற்காக ரூ.268 கோடி நிதி நடப்பாண்டு பட்ஜெட்டில் ஒதுக்கப்-பட்டது.

வருகிற செப்டம்பர் 17-ந்தேதி பெரியார் பிறந்த-நாளன்று மதிய உணவு திட்டத்தைதந்தபெருந்த-லைவர்காமராஜர்பிறந்த விருதுநகரில் இந்த திட்-டத்தின் விரிவாக்க தொடக்க விழா நடத்த முடிவு செய்யப்பட்டுள்-ளதாக கூறப்படுகிறது. இதற்காக விருதுநகரில் பெருந்தலைவர் காமரா-ஜர் படித்த கே.வி.எஸ். (காமராஜ் வித்யாசலா) நடுநிலைப்பள்ளியில் காலைஉணவுவிரிவாக்க திட்டத்தை முதலமைச்சர் விஜய் தொடங்கி வைக்க உள்ளதாக தக-வல்கள் வெளியாகி உள்ளன.தற்போது வரை இது குறித்து அதிகாரப்பூர்வ அறிவிப்பு எதுவும் இல்லை. எனி-னும் விழா நடைபெறுவ-தாக கூறப்படும் கே.வி. எஸ். பள்ளியில் தற்-போது இருந்தே முன்-னேற்பாடு பணிகள் நடந்து வருகின்றன.

கடந்தசில நாட்களுக்கு முன்பு மாவட்ட உயர் அதிகாரிகள் மற்றும் போலீசார் கே.வி.எஸ். பள்ளியில் நேரடி ஆய்வு மேற்கொண்டனர். அப்-போது முதலமைச்சர் வரும் வழித்தடங்கள், விழா நடைபெறும் இடம், மாணவ, மாணவிகளை சந்திப்பு குறித்து அதிகா-ரிகள் ஆலோசனை நடத்தியதாக தெரிகிறது.

விருதுநகர் கே.வி.எஸ். (காமராஜ் வித்யாசலா) பள்ளியில் ஒருபுறம் இதற்கான ஏற்பாடு தீவி-ரமாக நடைபெற்று வரும் நிலையில் முதலமைச்சரின் வருகை குறித்து தற்-போது வரை அரசு சார்-பில் உறுதி செய்யப்பட-வில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இதுவரை 626 பேர் பலி; நிறம் மாறிய புதிய ஏரி நேபாளத்திற்கு சீனா எச்சரிக்கை



இமயமலை அருகே சீனா திபெத் எல்லையில் உருவாகி ஓடும் லெண்டே கோலா நதி, நேபாளத்தில் கோஷி நதியாக பெயர் பெற்று, இந்தியாவுக்குள் கங்-கையில் கலக்கிறது.

இந்தலெண்டேகோலா நதியில் கடந்த புதன்கிழமை இமய-மலை பனிப்பாறைகள் விழுந்து நீரோட்டத்தை அடைத்ததால் அணை உடைந்தது.

போக வழியின்றி தேங்கியிருந்த தண்ணீர் அணை உடைந்ததால் வேகமாக கீழ் நோக்கி பாய்ந்தது. இதனால் நதி-யானது கோஷியாக நேபாளத்தின் ரசுவா மாவட்டத்தில் நுழை-யும்போது வெள்ளப்பெ-ருக்குக்கு உள்ளானது.

இந்த திடீர் வெள்ள-பெருக்கு காரணமாக ரசுவா மற்றும் சுற்றியுள்ள மாவட்டங்-களில் பல பகுதிகள் வெள்ளத்தில் மூழ்கின. இதுவரை இந்த பேரிட-ரில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை 626 ஆக உயர்ந்துள்ளது.

2,500 பேர் மாயமாகி-யுள்ளனர்.மீட்புபணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது. திபெத்திலும் வெள்ள பாதிப்பு அதிகம் ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் திபெத்-தில் லெண்டே கொலோ நதி அமைப்பின் மேல் பகுதியில் தற்காலிக ஏரி ஒன்று உருவாகி உள்-ளது.அந்தஏரியில்உள்ள நீரின் நிறம் மாறியுள்-ளதை சுட்டிக்காட்டி,அது எந்நேரத்திலும் கரைபு-ரண்டு பாயக்கூடும் என சீனா எச்சரித்துள்ளது.

கடந்த புதனன்று ஏற்-பட்ட வெள்ளத்தைத் தொடர்ந்து பனிப்பாறை சரிவு இடிபாடு-களால் நதி நீர் தடைபட்டு இந்த ஏரி உருவாகக் காரணமாக அமைந்தது.

சீனப் பகுதியில் உள்ள 'சோசென் நதியும், நேபாளப் பகுதியில் உள்ள 'புரேபு' நதியும் இணையும் இடத்திற்கு அருகில் இந்த ஏரி உரு-வாகியுள்ளது.

இந்த ஏரியின் நிறம் தொடர்ந்து கருமையாக மாறி வருவதாக நேபாள வெளியுறவு அமைச்ச-கத்துடன் பகிர்ந்த செய்-தியில் சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இது ஏரி எந்நேரத்திலும் தடுப்பை உடைத்து பாயக்கூடும் என்று அவர்கள் எச்சரித்-துள்ளனர்.

சீன நீர் வள அமைச்ச-கத்தின் கூற்றுப்படி, ஏரி-யின் நீர்மட்டம் படிப்படி-யாக உயர்ந்து வருகிறது.

நேற்றைய நிலவப்படி, இந்த ஏரியில் சுமார் 25 லட்சம் கன மீட்டர் நீர் தேங்கியுள்ளது.

தண்ணீரின் அளவு மிகஅதிகமாகஇல்லாத-தால், கீழ்நோக்கிய பகு-திகளில் உள்ள ஆறுக-ளில் நீர்வரத்து சற்று அதிகரிக்கக்கூடும் என்-றும்,ஆனால் மிகப்பெரிய அளவில் நீர்மட்டம் உயர வாய்ப்பில்லை என்ப-தையும் சீனா தெரிவித்-துள்ளது.

இருப்பினும் கீழ்நோக்கிய பகுதிகளில் வாழும் மக்கள் தொடர்ந்து எச்சரிக்கை-யுடன் இருக்குமாறு சீன அதிகாரிகள் அறிவுறுத்-தியுள்ளனர்.

# “தேர்தலில் சீட் வாங்கித்தர ரூ.4 கோடி மோசடி” சி.விஜயபாஸ்கர் மீது வழக்கு பதியக்கோரி மனு



சென்னை: சட்டப்பே-ரவை தேர்தலில் சீட் வாங்கித் தருவதாகக் கூறி பெற்ற 4 கோடி ரூபாயை திருப்பித் தரா-மல் ஏமாற்றிய முன்-னாள் அமைச்சர் சி.விஜ-யபாஸ்கர் உள்ளி-ட்டோருக்கு எதிரான புகார் மீது வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடக் கோரி, ஆலங்குடி அதி-முக வேட்பாளர் தனவி-மல்,சென்னை உயர் நீதி-மன்றத்தில் மனுத் தாக்கல் செய்துள்ளார்.

ஆலங்குடியைச் சேர்ந்த தனவிமல் தாக்-கல் செய்துள்ள மனு-வில், சட்டப்பேரவை தேர்தலில் ஆலங்குடி தொகுதியில் அதிமுக சார்பில் போட்டியிட விருப்பம் தெரிவித்து விண்ணப்பித்திருந்ததா-கக் கூறியுள்ளார்.

இது சம்பந்தமாக அப்போது மாவட்டச் செயலாளராக இருந்த முன்னாள் அமைச்சர் சி.விஜயபாஸ்கர், தன்னை மொபைல் போனில் மேற்கொள்-ளும் தகுதியை நிரூபிக்க ரூ.5கோடிதரும்படி வலி-யுறுத்தினார். மேலும், வேட்பாளர் பட்டியல் அறிவித்ததும் பணத்தை திருப்பித் தந்து விடுவ-தாக உறுதியளித்ததாக-வும் மனுவில் தெரிவித்-துள்ளார்.அதன்படி, 4 கோடியே 50 லட்சம் ரூபாயை திரட்டி, சி.விஜ-யபாஸ்கர் குறிப்பிட்ட ஒப்பந்ததாரர் சோத்துப்-பாலை முருகேசன் என்-பவரிடம் கொடுத்ததாக-வும், வேட்பாளர் பட்டியலில் தனது பெயர் அறிவிக்கப்பட்ட பின், தேர்தல் செலவுகளுக்-காக பணத்தை திருப்பிக் கேட்டபோது, 50 லட்சம் ரூபாய் மட்டுமே திருப்பி தந்ததாகவும், மீதமுள்ள தொகையை தராமல் இழுத்தடித்ததாகவும் மனுவில் குற்றம் சாட்டி-யுள்ளார்.தற்போது சி. விஜயபாஸ்கர், ஆளும் தவெக-வில் இணைந்-துள்ள நிலையில், பணத்தை திருப்பிக் கேட்ட போது மிரட்டல் விடுத்ததாகவும், இது-சம்பந்தமாக புதுக்கோ-ட்டை மாவட்ட காவல் கண்காணிப்பாளருக்கு புகார் அளித்தும் எந்த நடவடிக்கையும் எடுக்க-வில்லை என மனுவில் குறிப்பிட்டுள்ளார்.

தனது புகார் மீது வழக்-குப்பதிவு செய்து விசா-ரணை நடத்த உத்தரவிட வேண்டும் என மனுவில் கோரிக்கை விடுத்திருக்-கிறார். இந்த மனு, விரை-வில் விசாரணைக்கு வரும் என எதிர்பார்க்-கப்படுகிறது.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில் இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt


# வானிலை முன்னறிவிப்பு: தமிழகத்தில் செப்டம்பர் 3 வரை மிதமான மழைக்கு வாய்ப்பு

சென்னை:

தமிழகத்தில் நாளை முதல் செப்.3-ம் தேதி வரை ஓரிரு இடங்களில் லேசானது முதல் மித-மான மழை பெய்யக்-கூடும்.

இது தொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளி-யிட்ட செய்திக் குறிப்பு: தமிழககடலோரப்பகுதி-களில் கீழ்மட்ட வளி-மண்டலத்தில் ஒரு பல-வீனமான காற்றழுத்தத் தாழ்வுப் பாதை நில்வுகிறது. இதன் காரா-ணமாக தமிழகத்தில்



ஒரிருஇடங்களில்நாளை (ஆக.30) இடி, மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்யக்கூடும். 31-ம் தேதி தமிழகத்தில் ஒரிரு இடங்களில் லேசான மழை பெய்யக்-கூடும்.

செப்.1 முதல் 3-ம் தேதி வரை வட தமிழக கட-லோர மாவட்டங்கள் மற்றும் மேற்கு தொடர்ச்சிமலைமாவட்-டங்களில் ஓரிரு இடங்க-ளில் இடி, மின்னல் மற்-றும் பலத்த காற்றுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழையும்,இதர தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் லேசான மழை பெய்யக்கூடும். 4-ம் தேதி தமிழகத்தில் ஓரிரு இடங்களில் லேசான முதல் மிதமான மழை பெய்யக்கூடும்.

நாளை முதல் செப்.2-ம் தேதி வரை தமிழகம், புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் அதிகபட்ச வெப்பநிலை ஒருசில இடங்களில் வழக்கத்தை விட 5 டிகிரி ஃபாரன்ஹீட் வரை அதி-கமாக இருக்கக்கூடும்.

சென்னை மற்றும் புற-நகர் பகுதிகளில் நாளை வானம் ஓரளவு மேக-மூட்டத்துடன் காணப்ப-டும். மாலை அல்லது இரவு நேரங்களில் நக-ரின் ஒருசில பகுதிகளில் இடி,மின்னலுடன் கூடிய லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

தமிழகத்தில் இன்று காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் பதிவான மழை அளவுகளின்படி சேலம் மாவட்டம் கருப்-பூரில் 5 செமீ, நீலகிரி மாவட்டம் பந்தலூர், பார்வூட்டில் தலா 4 செமீ, நீலகிரி மாவட்டம் தேவாலா, திண்டுக்கல் மாவட்டம்நத்தம்,நாமக்-கல் மாவட்டம் மங்களபு-ரம் ஆகிய இடங்களில் தலா 3 செமீ மழை பதி-வாகியுள்ளது.

## வாடகை கட்டணத்தை உயர்த்த வலியுறுத்தி ஜேசிபி உரிமையாளர் சங்கத்தினர் மூன்று நாட்கள் நடத்திய வேலை நிறுத்த போராட்டம் முடிவுக்கு வந்தது



ஜேசிபி உதிரி பாகங்கள் விலை உயர்வால் வாடகை கட்டணத்தை உயர்த்த வலியுறுத்தி தேனி மாவட்டத்தில் கடந்த மூன்று நாட்களாக ஜேசிபி உரிமையாளர்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர் தேனி, போடி, சின்னமனூர் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜேசிபி வாகனங்களை நிறுத்தி இந்த வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர்

ஜேசிபி உதிரி பாகங்கள் விலை உயர்வு, மற்றும் ஆயில், டீசல் விலை உயர்வினால் ஜேசிபி உரிமையாளர்கள் கடுமையாக பாதிக்கப்பட்டு வருவதாகவும் இதனால் ஒரு மணி நேரத்திற்கு 1200 ரூபாயாக இருந்த வாடகையை குறைந்தபட்சமாக 1500 ரூபாயாக வழங்க வேண்டும் என்றும் இரண்டு மணி நேரத்திற்கு4,500வாடகை கட்டணத்தை உயர்த்தி வழங்க வேண்டும் என வலியுறுத்தி மூன்று நாட்கள் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபட்டு வந்தனர் இ மாவட்டத்தில்கட்டுமானதொழில்கள், செங்கல் காளவாசல் தொழில், குவாரி தொழில் உள்ளிட்டவை பாதிக்கப்படும் சூழ்நிலை ஏற்பட்டு வந்தது

இந்தநிலையில்ஜேசிபி உரிமையாளர்களின் கோரிக்கை ஏற்று அவர்கள் நிர்ணயித்த வாடகையை வழங்குவதற்கு வாடிக்கையாளர்கள் ஆதரவு தெரிவித்த நிலையில் வேலை நிறுத்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது

ஜேசிபி வாடகை கட்டணம் உயர்வுக்கு வாடிக்கையாளர்கள் ஆதரவு தெரிவித்துள்ளதால் ஜேசிபி உரிமையாளர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்

மேலும் ஜேசிபி உரிமையாளர்கள், ஆப்பரேட்டர்களுக்கு தமிழக அரசு நலவாரியம் அமைத்து தர வேண்டும் என ஜேசிபி உரிமையாளர்கள் சங்க கூட்டமைப்பு சார்பில் கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது

## தேவகோட்டை தலைமை அஞ்சலகத்தில் சேர்மன் மாணிக்க வாசகம் பள்ளி மாணவர்களின் களப்பயணம்



தேவகோட்டை தலைமை அஞ்சலகத்திற்கு சேர்மன் மாணிக்க வாசகம் நடுநிலைப் பள்ளி மாணவர்கள் களப்பயணம் மேற்கொண்டு, அஞ்சல் துறையின் செயல்பாடுகள் மற்றும் பல்வேறு சேவைகள் குறித்து நேரில் அறிந்து கொண்டனர். பள்ளித் தலைமை ஆசிரியர் லெ. சொக்கலிங்கம் தலைமையில் நடைபெற்ற இக்களப்பயணத்தில் மாணவர்கள் பங்கேற்றனர். தேவகோட்டை தலைமை தபால் அதிகாரி வீரபாண்டியன் மாணவர்களை வரவேற்றார்.

அஞ்சலகத் துறையின் செயல்பாடுகள், பொதுமக்களுக்கு வழங்கப்படும் பல்வேறு சேவைகள், அஞ்சல் அனுப்பும் நடைமுறைகள் உள்ளிட்டவை குறித்து அஞ்சலக உதவி அதிகாரி செல்வராஜ் மற்றும் அஞ்சலக அலுவலர்கள் மாணவர்களுக்கு செய்முறை விளக்கம் அளித்தனர். மாணவர்களிடம் அஞ்சல் துறை தொடர்பாக பல்வேறு கேள்விகள் கேட்கப்பட்டன. கேள்விகளுக்கு சரியான பதில்களை அளித்த மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. இதன் மூலம் மாணவர்கள் அஞ்சலக சேவைகள் குறித்து ஆர்வத்துடன் அறிந்து கொண்டனர். களப்பயணத்திற்கான ஏற்பாடுகளை ஆசிரியைகள் ஆர்த்தி, சிவரஞ்சனி மற்றும் ஆசிரியர் ஸ்ரீதர் ஆகியோர் செய்திருந்தனர்.

## திருவள்ளூர் மாவட்டம் செவ்வாப்பேட்டை அரசு ஆதிதிராவிடர் நல ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மற்றும் திருவூர் அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளியில் பள்ளி மேலாண்மைக் குழு விழுப்புணர்வு கூட்டம்



திருவள்ளூர் மாவட்டம் செவ்வாப்பேட்டை ஆதிதிராவிடர் நல மேல்நிலைப்பள்ளியில் 2026 ஆம் ஆண்டிற்கான பள்ளி மேலாண்மை மறு கட்டமைப்பு செய்வதற்கான விழுப்புணர்வு கூட்டம் தலைமையாசிரியர் ஆர். வெங்கடேசன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது ,

முன்னதாக அனைவரையும் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் ஜெயக்குமார், ஓய்வுபெற்ற தலைமையாசிரியர் ஜான்சன் ,முன்னாள் வார்டு உறுப்பினர் ஆனந்த் ஆகியோர் முன்னிலை வகித்தனர் , தமிழ்நாடு அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நல கூட்டமைப்பின் நிறுவனத் தலைவரும் பள்ளியின் தூதுவர் சா.அருணன் பள்ளி மேலாண்மைக் குழு விழுப்புணர்வு குறித்து விளக்கினார் ஆசிரியர்கள் மணிகண்டன் , வசந்த் குமார், ரஜினி குமாரி, அனிதா சைனி, நோமலீஸ்வரி, கலைவாணி, ராஜேஸ்வரி, இன்பராஜ்,ராஜேந்திரன், சுரேஷ்குமார், சங்கரலிங்கம், கோகுல், தீபா, ராமமூர்த்தி, திவாகர் உள்ளிட்டோர் மற்றும் பெற்றோர் திரளாக கலந்துக் கொண்டனர் முடிவில் பள்ளி மேலாண்மைக் குழு தலைவர் லாவண்யா ஜெயக்குமார் நன்றி கூறினார் , மேலும் திருவூர் அரசு ஆதிதிராவிடர் நல ஆரம்பப்பள்ளியிலும் பள்ளி மேலாண்மைக் குழு விழிப்புணர்வு கூட்டம் தலைமையாசிரியை கி.விஜி அனந்தநாயாகி தலைமையில் நடைபெற்றது இதில் பள்ளி மேலாண்மைக் குழுதலைவர்அ.ஆனந்தி வரவேற்றார் , துணைத் தலைவர் எம்.பூர்ணிமா , எஸ்.எம்.சி ஆசிரியை பா.தீபா ஆகியோர் முன்னிலை வகித்தனர் விழிப்புணர்வு குறித்து பள்ளி மேலாண்மைக் கல்வியாளர் குழு உறுப்பினர் சா.அருணன் விளக்கினார் நிகழ்ச்சியில் நாகஜோதி, விஜி, வனிதா, உள்ளிட்ட பெற்றோர்கள் கலந்துக் கொண்டனர்



கன்னியாகுமாரி மாவட்டம் சுசீந்திரத்தில் அமைந்துள்ளஉலக பிரசித்தி பெற்ற தாணு மாலையன் திருக்கோயில் நேர் முன்புறம் அமைந்துள்ள மடத்தில் போதை ஆசாமிகள் மற்றும் அரைகுறை ஆடையுடன் மற்றும் புகைப்பிடித்துக் கொண்டும் இருப்பதால் கோயிலுக்கு வரும் பக்தர்கள் மற்றும் சுற்றுலா பயணிகள் முகம் சுளித்து செல்கின்றனர்.. ஆகவே உடனடி நடவடிக்கை எடுத்து அப்புறப்படுத்த கோயில் நிர்வாகத்திற்கு மற்றும் காவல் துறைக்கு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.




## தி கொங்கு வேளாளர் இன்ஸ்ட்டிடியூட் ஆப் டெக்னலாஜி டிரஸ்ட்டின் நிறுவனர் தின விழாவில், ரூ.100 கோடி மதிப்பிலான "அறிவுக்கூடம்" ஆராய்ச்சி பூங்காவிற்கான கல்வெட்டினை இந்தியக் குடியரசு துணைத்தலைவர் திறந்து வைத்தார்

1983 ஆம் ஆண்டு கொங்கு வேளாளர் சமுதாயத்தை சார்ந்த 41 புரவலர்களால், தி கொங்கு வேளாளர் இன்ஸ்ட்டிடியூட் ஆப் டெக்னலாஜி

டிரஸ்ட் தொடங்கப்பட்டது. இந்த அறக்கட்டளையின் மூலம் கொங்கு பாலிடெக்னிக் கல்லூரி, கொங்கு பொறியியல் கல்லூரி, கொங்கு கலை மற்றும் அறிவியல் கல்லூரி,கொங்கு பிரைவேட் இண்டஸ்ட்ரியல் ட்ரைனிங் இன்ஸ்ட்டிடியூட், கொங்கு நேஷனல் மெட்ரிகுலேஷன் ஹையர் செகண்டரி ஸ்கூல், கொங்கு நேச்சுரோபதி மற்றும் யோகா மெடிக்கல் காலேஜ் அண்ட் ஹாஸ்பிடல் ஆகிய ஆகச்சிறந்த 6 நிறுவனங்கள்நிர்வகிக்கப்படுகின்றன. அனைத்து நிறுவனங்களும், பல்வேறு துறைகளில் அடைந்த தன்னிகரற்ற சாதனைகளின் மூலம் புகழின் உச்சத்தை அடைந்து கொண்டு இருக்கின்றன. இந்த சாதனை மற்றும் புகழின் மூலம்இந்நிறுவனங்கள் தமிழ்நாடு மட்டும் இல்லாமல் அகில இந்திய அளவில் சிறப்பிடம் பெற்றுள்ளன. இவ்வளவு சிறப்பு மிக்க நிறுவனங்களை நடத்திக் கொண்டு வரும் அறக்கட்டளையின் நிறுவனர் தினம் 29.08.2026 நேற்று, கொங்கு பொறியியல் கல்லூரியின் கொங்கு பல்கலை மையத்தில் நடைபெற்றது. இவ்விழாவில்,இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு விழாவைச் சிறப்பித்தார். மேலும் இவ்விழாவில் கௌரவ விருந்தினர்களாக தமிழ்நாடு மற்றும் கேரளாஆளுநர்ராஜேந்திர அர்லேகர், உச்ச நீதிமன்ற நீதியரசர் எம்.எம். சுந்தரேஷ், மற்றும் சென்னை பொன் பியூர் கெமிக்கல்ஸ் குழு மத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குனர் எம். பொன்னுசாமி ஆகியோர் பங்கேற்றனர். அறக்கட்டளையின் வளர்ச்சிப் பயணத்தில் குறிப்பிடத்தக்க புதிய மைல்கல்லாக, 100 கோடி மதிப்பிலான "அறிவுக்கூடம்" என்கின்ற ஆராய்ச்சிப் பூங்காவிற்கான கல்வெட்டினை இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் C.P.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார். இவ்வாராய்ச்சிப் பூங்காவில் தொழில்நுட்ப வணிகக் காப்பகமையம்,புத்தாக்க ஆய்வகம், பல்வேறு பொறியியல் துறைகளுக்கானசிறப்புமையங்கள் மற்றும் தொழில்துறைஆராய்ச்சிமையங்கள் ஆகியவை அமைய வுள்ளன. அமையவுள்ளன. இந்த இந்த அறிவுக்கூட அறிவுக்கூடமானது கோயம்புத்தூர் ரூட்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட் என்ற ன்றநிறுவனத்தின் முன்னெடுப்போடு, கோயம்புத்தூர் புலி மெசின்ஸ் பிரைவேட் லிமிடெட், பெருந்துறை கோரல் மேனுபாக்ச்சரிங் ஒர்க்ஸ்,சென்னை டான்பாஸ் இந்தியா, திருப்பூர் ஜனனி கிளைமேட் ஆக்சன் பிளாட்பார்ம், சென்னைலோட்டே இந்தியா கார்ப்பரேஷன் பிரைவேட் லிமிடெட், சென்னை மேக்டெர்மிட் ஆல்பா எலெக்ட்ரானிக்ஸ் சொல்யூஷன்ஸ், பெருந்துறை மில்க்கி மிஸ்ட் டைரி பூட் லிமிடெட், பெருந்துறை செயின் கோபைன் இந்தியா பிரைவேட் லிமிடெட்,ஈரோடு எஸ்கேஎம் குரூப் ஆப் கம்பெனீஸ், ஈரோடுயூஆர்சிகன்ஸ்ட்ரக்சன் பிரைவேட் லிமிடெட் மற்றும் பெருந்துறை விஎம்சி ஸ்டீல் அன்ட் அல்லாய்ஸ் இண்டஸ்ட்ரீஸ் ஆகிய நிறுவனங்களின் பங்கேற்போடு உருவாக உள்ளது. பத்ம பூஷன் விருது பெற்ற உலக சமுதாய சேவா சங்கத்தின் தலைவர் முனைவர். எஸ்.கே.எம்.மயிலானந்தன் மற்றும் சென்னை அப்பலோ மருத்துவமனையின் இரைப்பை குடல் இயல் மருத்துவர் கே.ஆர்.பழனிசாமி ஆகியோரை குடியரசு துணைத்தலைவர் கௌரவித்து மகிழ்ந்தார்.

இந்நிகழ்வில் அறக்கட்டளையின் தலைவர் சி.தேவராஜன்,செயலாளர் ஆர்.ஆர்.சத்தியமூர்த்தி, பொருளாளர் ஈ.ஆர்.கார்த்திகேயன், அனைத்து கல்வி நிறுவனங்களின் தாளாளர்கள், அறக்கட்டளையின் பாரம்பரிய உறுப்பினர்கள். கல்வி நிறுவனங்களின் முதல்வர்கள், அனைத்து ஆசிரியர்கள், ஆசிரியர்அல்லாதபணியாளர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்றனர்.

## அமைச்சர் பெயரை சொல்லி ஒப்பந்ததாரர்களை மிரட்டும் அதிகாரிகள் மாநகராட்சி சாதாரண கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பரபரப்பு குற்றச்சாட்டு

தூத்துக்குடி மாநகராட்சியில் வேலை பார்த்த அதிகாரிகள் சிலர் அமைச்சர் பெயரை சொல்லி ஒப்பந்ததாரர்களை மிரட்டி வருகின்றனர் என மாநகராட்சி மாமன்ற கூட்டத்தில் மேயர் ஜெகன் பெரியசாமி பரபரப்பு குற்றச்சாட்டு முன்னாள் திமுக சட்டமன்ற உறுப்பினர் நிதியில் கட்டப்பட்டதில் தற்போதைய அமைச்சர் பெயர் எப்படி போட முடியும் அமைச்சர் மதன்ராஜ் ஒரு பைசா கூட தூத்துக்குடி மாநகராட்சிக்கு வழங்கவில்லை என மேயர் ஜெகன் பெரியசாமி குற்றச்சாட்டு

தூத்துக்குடி மாநகராட்சி சாதாரண கூட்டம் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில் நடைபெற்றது அந்த கூட்டத்தில் மாநகராட்சி ஆணையர் பிரியங்கா மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

கூட்டம் துவங்கியதும் மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி கூறுகையில் ஆட்சி மாறினாலும் எங்கள் பணி சிறப்பாக செயல்பட்டு வருவதாக தெரிவித்தார் தூத்துக்குடி மாநகரில்பல்வேறு திட்ட பணிகள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார் பக்கீல் ஓடை அகலப்படுத்தப்பட்டு மழைக்காலங்களில் சுமார் 2 லட்சம் கன அடி நீர் கடலுக்கு வெளியேற்றும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது என தெரிவித்தார் இன்னும் 50 ஆண்டுகளுக்கு தூத்துக்குடி மாநகரில் மழைக்காலங்களில் மழைநீர்தேங்காய்வண்ணம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

இதைத்தொடர்ந்து அதிமுக மற்றும் திமுகவிலிருந்து தமிழக வெற்றி கழகத்திற்கு மாறிய மாநகராட்சி கவுன்சிலர்கள் மந்திரமூர்த்தி மற்றும் ராமர் ஆகியோர் மாநகராட்சி மேயரிடம் மாநகராட்சி சார்பில் கடந்த சில நாட்களுக்கு முன்பு திற க்கப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையத்தில் தற்போதைய அமைச்சர் மதன்ராஜ் பெயர் இடம் பெறவில்லைஎனகூறிதமிழக வெற்றி கழககவுன்சிலர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்




பேசியமேயர் ஜெகன் பெரியசாமி நீங்கள் இருவரும் இன்னும் மாநகராட்சி ஆவணப்படி அதிமுக மற்றும் திமுக மாமன்ற உறுப்பினராகவே உள்ளனர் என தெரிவித்தார்

உடனே தமிழக வெற்றி கழக கவுன்சிலர் ராமர் அத்திமரப்பட்டி பகுதியில் மாநகராட்சி சார்பில் திறக்கப்பட்ட கட்டிடத்தில் அமைச்சர் மதன்ராஜ் பெயர் இல்லை என தெரிவித்தார் அதற்கு மாநகராட்சி மேயர் ஜெகன்பெரியசாமி அந்த கட்டிடம் முன்னாள் திமுக சட்டமன்ற உறுப்பினர் சண்முகையா நிதியிலிருந்து கட்டப்பட்டது அமைச்சர் மதன்ராஜ் தூத்துக்குடி மாநகராட்சிக்கு இதுவரை ஒரு நிதி கூட வழங்கவில்லை என பரபரப்பு குற்றச்சாட்டு தெரிவித்தார் அப்படி இருக்கும்போது அமைச்சர் பெயர் எப்படி போட முடியும் என தெரிவித்தார்

இதைத்தொடர்ந்து தமிழக வெற்றி கழக கவுன்சிலர்மற்றும்திமுக கவுன்சிலர்களிடையே மேயர் முன்பாக வாக்குவாதம் நடைபெற்றதால் அந்தப் பகுதியில் கூச்சக் குழப்பம் நிலவியது

இதைத் தொடர்ந்து பேசிய மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி தருவைகுளம் செல்லும் வழியில் அமைந்துள்ள குப்பை கிடங்கில் தூத்துக்குடி மாநகராட்சி சார்பில் மரங்கள் நடப்பட்டு காடுகளாக உருவாக்கப்பட்டுள்ளது ஆனால் கடந்த வாரம் அந்த பகுதியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் இரண்டு அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள் அதில் மேயர் பெயர் போடவில்லை நாங்கள் என்ன குற்றமா சொல்கிறோம் மேலும் தூத்துக்குடி மாநகராட்சிக்கு சொந்தமான நடுநிலைப் பள்ளியில் நடைபெற்ற விழாவில் அமைச்சர் கலந்து கொண்டார் அதிலும் என்னுடைய பெயர் போடவில்லைஎனதெரிவித்தார் மேலும் அந்த பள்ளியில் தலைமை ஆசிரியர் பணம் வாங்குவதாகபுகார்வந்தநிலையில் தற்போது அமைச்சரை வைத்து நிகழ்ச்சி நடத்திக் கொண்டிருக்கிறார் என தெரிவித்தார்

மேலும் தூத்துக்குடி மாநகராட்சியில் இதற்கு முன்பு வேலை பார்க்க அதிகாரிகள் தற்போது அமைச்சர் பெயரைச் சொல்லி தூத்துக்குடி மாநகராட்சி ஒப்பந்ததாரர்களை மிரட்டியும் வருகின்றனர் இது தொடர்பாக லஞ்ச ஒழிப்புத்துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என தெரிவித்த சம்பவத்தால் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.



ஈரோடு கொங்கு வேளாளர் இன்ஸ்டிடியூட் ஆப் டெக்னாலஜி நிறுவனத்தின் நிறுவனர் தின விழாவிற்கு (29.08.2026) நேற்று வருகை புரிந்த இந்திய குடியரசு துணைத்தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை கைத்தறி துணிநூல், காதித்துறை அமைச்சர் மா.விஜய்பாலாஜி பூங்கொந்து வழங்கி வரவேற்றார். உடன் தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேக்கர் , மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர், ஈரோடு மாவட்டம், பெருந்துறை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில், ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை (விழுதுகள்) நேற்று (29.08.2026)திறந்து வைத்து மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.

# செயற்கை நுண்ணறிவின் புதிய பரிமாணங்களை அறிமுகப்படுத்திய சிறப்பு கருத்தரங்கம்



இராணிப்பேட்டை மாவட்டம் விளாப்பாக்கத்தில் அமைந்துள்ள டி.எல்.ஆர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கணினி அறிவியல், கணினி பயன்பாட்டியல் மற்றும் செயற்கை நுண்ணறிவு துறைகள் சார்பில் "Deep Learning" என்ற தலைப்பில் ஒருநாள் சிறப்பு கருத்தரங்கம் கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது.

கருத்தரங்கில் கல்லூரியின் தலைவர் A.L. ரவி, தாளாளர் P. கோமதி ரவி, முதல்வர் டாக்டர் D. கௌதமன் மற்றும் புல முதன்மையாளர் B. நிர்மலா ஆகியோர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.

சிறப்பு விருந்தினராக FIIT Formacion Pvt. Ltd. நிறுவனத்தின் மென்பொருள் பயிற்சியாளர் S. ராஜ்குமார் கலந்து கொண்டு மாணவர்களுக்கு சிறப்புரையாற்றினார். அப்போது Deep Learning தொடர்பான அடிப்படைக் கருத்துகள், அதன் முக்கியத்துவம் மற்றும் நடைமுறைப் பயன்பாடுகள் குறித்து விளக்கினார்.

மேலும் Image Recognition, Speech Recognition, Natural Language Processing, Recommendation Systems உள்ளிட்ட பல்வேறு துறைகளில் Deep Learning பயன்படுத்தப்படும் விதம் குறித்தும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்ச்சியில் 100-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கலந்து கொண்டு பயனடைந்தனர். கருத்தரங்கிற்கான ஏற்பாடுகளை கணினி பயன்பாட்டியல் துறை பேராசிரியர்கள் ஒருங்கிணைத்து சிறப்பாக செய்திருந்தனர்.

# தொடர் கஞ்சா தடுப்பு சோதனையில் 1 கிலோ 550 கிராம் கஞ்சா பறிமுதல்; மூன்று பேர் கைது




கன்னியாகுமரி மாவட்டத்தில் கஞ்சா, குட்கா, புகையிலை உள்ளிட்ட போதைப்பொருட்கள் முற்றிலும் ஒழிக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .ஸ்டாலின் தலைமையில் காவல்துறையினர் கண்காணிப்பு மற்றும் தொடர்ச்சியான அதிரடி நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் தொடர்ச்சியாக இரணியல் காவல் நிலையஎல்லைக்குஉட்பட்ட பகுதியில் கஞ்சா விற்பனை நடைபெறுவதாக கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் குளச்சல் உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் .காந்தி மேற்பார்வையில் இரணியல் காவல் ஆய்வாளர். அந்தோணியம்மாள் தலைமையில் காவல்துறையினர் தீவிர சோதனையில் ஈடுபட்டனர்.

மேற்கொண்ட சோதனையில் நெய்யூர் மேல்கரை பகுதியை சேர்ந்த பால்ராஜ் என்பவரின் மகன் மணிகண்டன் (23), தலைக்குளம்புதுக்குளம் பகுதியை சேர்ந்த ராதாகிருஷ்ணன் என்பவரது மகன் பிரசாத் (22) மற்றும் கோவில் விளாகம் பூத்துறை பகுதியை சேர்ந்த ஐசக் என்பவரின் மகன் டெக்ஸ்ட் ரோஸ் (28) ஆகியோரை கைது செய்த காவல்துறையினர் அவர்களிடம் இருந்து அரசால் தடை செய்யப்பட்ட 1 கிலோ 550 கிராம் கஞ்சா பறிமுதல் செய்த காவல்துறையினர் இரணியல் காவல் நிலையத்தில் CR.NO.467/2026 U/S 8(c) r/w 20b(ii)(B),25,29(1)of NDPS ACT பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்தனர்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் போதைப்பொருள் விற்பனை மற்றும் பயன்பாட்டில் ஈடுபடுபவர்கள் மீது இதுபோன்ற அதிரடி நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும். சட்டவிரோத செயல்களில் ஈடுபடுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என காவல்துறை கடும் எச்சரிக்கை விடுத்துள்ளது.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர், ஈரோடு மாவட்டம், பெருந்துறை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில், ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை (விழுதுகள்) நேற்று (29.08.2026) திறந்து வைத்தார்கள். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் , ஈரோடு மாவட்டம் பவானிசாகர் அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை (விழுதுகள்) நேற்று (29.08.2026) குத்துவிளக்கு ஏற்றி திறந்து வைத்தார். உடன் பவானிசாகர் சட்டமன்ற உறுப்பினர் வி.பி. தமிழ்ச்செல்வி, கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சங்கர்கணேஷ் உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் ஈரோடு மாவட்டம் ஏழூரில்அரசுநேரடிநெல்கொள்முதல்நிலையத்தினைநேற்று(29.08.2026)திறந்துவைத்தார்.உடன்கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.

# தூத்துக்குடி முயல்தீவு ஸ்ரீ கோரபுத்து முனியசாமி கோவில் கொடை விழா 5,000 பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம்!



தூத்துக்குடி முயல்தீவு பகுதியில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கோரபுத்து முனியசாமி திருக்கோவில் கொடை விழா விமரிசையாக நடைபெற்றது. விழாவையொட்டி சிறப்பு பூஜைகள் மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

கோவில் தலைவர்,தர்மகர்த்தா மற்றும் முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க பொருளாளர் எஸ்.ஆர். சந்தனராஜ் தலைமையில், 5,000-க்கும் மேற்பட்ட பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் தூத்துக்குடி மாவட்ட அண்ணா சங்குகுளி தொழிற்சங்க துணைத் தலைவர் மாரிலிங்கம், செயலாளர் முருகையா, ஆலோசகர் மகாராஜா, அகமது, முத்தரையர் கனவா மீன்பிடி நலச்சங்க தலைவர் முனியசாமி, துணைத்தலைவர் ராஜேந்திரன், செயலாளர் பாலு, துணைச் செயலாளர் ஜெகன், ஒருங்கிணைப்பாளர் வெள்ளைச்சாமி, ஆலோசகர் இசக்கிமுத்து மற்றும் கோவில் நிர்வாகிகள் இளைஞரணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

விழாவில் பக்தர்கள் மற்றும் பொதுமக்கள் திரளாககலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்து, அன்னதானத்தில் பங்கேற்றனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் ஈரோடு மாவட்டம், டி.என்.பாளையம் அரசு ஆரம்ப சுகாதார நிலைய வளாகத்தில் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை (விழுதுகள்) நேற்று (29.08.2026) திறந்து வைத்தார். உடன் கோபிசெட்டிபாளையம் வருவாய் கோட்டாட்சியர் சிந்துஜா உட்பட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை அமைச்சர் கே.ஏ.செங்கோட்டையன் மற்றும் கைத்தறி, துணிநூல் மற்றும் காதித்துறை அமைச்சர் ம.விஜய்பாலாஜி ஆகியோர், ஈரோடு மாவட்டம், பெருந்துறை, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வளாகத்தில் ஒருங்கிணைந்த மறுவாழ்வு சேவை மையத்தினை (விழுதுகள்) நேற்று (29.08.2026) திறந்து வைத்தார்கள். உடன் மொடக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் டி.சண்முகன் உட்பட பலர் உள்ளனர்.

## தூத்துக்குடியில் உப்பளத்தை அரசு கையகப்படுத்தி கப்பல் கட்டும் தளம் அமைக்கும் திட்டத்தை கைவிட வேண்டும் உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை பாதுகாக்க வேண்டும் என்.ஆர். தனபாலன் வலியுறுத்தல்



தூத்துக்குடியில் பெருந்தலைவர் மக்கள் கட்சி தலைவர் என்.ஆர். தனபாலன், மாநில வழக்கறிஞர் அணி தலைவர் வழக்கறிஞர் எஸ். ஜெயச்சந்திரன் பிரையண்ட் நகர் அலுவலகத்திற்கு வந்தபோது செய்தியாளர்களை சந்தித்தார். அவர் கூறுகையில், தூத்துக்குடியில் உள்ள உப்பளங்களை அரசு கையகப்படுத்தி கப்பல் கட்டும் தளம் அமைக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதனால் ஆயிரக்கணக்கான உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படும் என்றும் தெரிவித்தார். எனவே, கப்பல் கட்டும் தளத்தை வேறு இடத்தில் அமைத்து, உப்பளத் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை கருத்தில் கொண்டு இத்திட்டத்தை அரசு கைவிட வேண்டும் என வலியுறுத்தினார்.

மேலும், கடந்த ஏப்ரல் 7-ஆம் தேதி தென்காசி மாவட்டம் ஆலங்குளம் ஒன்றியம் மருதமுத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பனை விவசாயி மணிகண்டன் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்ட சம்பவத்தில், அவர் தற்போது நடக்க முடியாமல் வாழ்வாதாரத்தை இழந்து தவித்து வருவதாகக் கூறினார்.

சம்பந்தப்பட்ட எஸ்.ஐ. இசக்கிராஜாவை நிரந்தரமாக பணிநீக்கம் செய்ய வேண்டும். மணிகண்டனின் மனைவி பொன்மணிக்கு அரசு வேலை வழங்க வேண்டும். மேலும், மணிகண்டனால் தொழில் செய்ய முடியாத நிலையை கருத்தில் கொண்டு தமிழக அரசு ரூ.10லட்சம் நிவாரணத் தொகை வழங்க வேண்டும் என என்.ஆர். தனபாலன் கோரிக்கை விடுத்தார்.

இந்நிகழ்வில் தலைமை நிலையச் செயலாளர் சிவக்குமார், வழக்கறிஞர் எஸ். ஜெயச்சந்திரன், தமிழ்நாடு நாடார் பேரவை தூத்துக்குடி மத்திய மாவட்ட தலைவர் எஸ். டி. கணேசன், பெருந்தலைவர் மக்கள் கட்சி தூத்துக்குடி மத்திய மாவட்ட தலைவர் பொன்ரத்தினம், செயலாளர் மரிய அந்தோணி வளன், துணைத் தலைவர் காமராஜ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தமிழ்நாடு நாடார் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## மனித கறி சமைக்கப்பட்ட சம்பவம்: தம்பதி கைது போலீசார் வெளியிட்ட தகவல்

கூடுவாஞ்சேரி கொலை வழக்கில் குற்றம்சாட்டப்பட்ட தம்பதி, மணிப்பூர்மாநிலம்,ஜிரிபாம் மாவட்டம்,காஷிம்பூர் பகுதியில் கைது செய்யப்பட்டனர். இருவரும் மணிப்பூரில் உள்ள குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு, Transit Warrant பெறப்பட்ட பின்னர் சென்னைக்கு அழைத்து வரப்பட உள்ளனர்.





இது தொடர்பாக காவல்துறை தலைமை இயக்குநர் அலுவலகம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறப்பட்டுள்ளதாவது:-

கூடுவாஞ்சேரி காவல் நிலைய போலீசார்,இம்மாத தொடக்கத்தில் தமிழ்நாடு எக்ஸ்பிரஸ் ரெயிலில் உள்ள சூட்கேஸில் துண்டு துண்டாக வெட்டப்பட்ட நிலையில் பெண்ணின் உடல் கண்டெடுக்கப்பட்ட கொலை வழக்கில் முக்கிய குற்றவாளிகளை கைது செய்துள்ளனர். மாணிக் உத்தீன் லஸ்கர் (22) மற்றும் பகாபதி மாஜி ஆகிய இருவரும் மணிப்பூர் மாநிலம், ஜிரிபாம் மாவட்டம், காஷிம்பூர் பகுதியில் கைது செய்யப்பட்டனர்.

பெண்ணின் உடல்

கடந்த ஆகஸ்ட் 5ஆம் தேதி,ரெயில் எண் 12621-ன் முன்பதிவு செய்யப்படாத பெட்டியில், ரெயில் ஆக்ராவை சென்றடைந்தபோது சிவப்பு நிற சூட்கேஸிலிருந்து துர்நாற்றம் வீசியதை பயணிகள் கவனித்தனர். இதையடுத்து, அரசு ரெயில்வே போலீசார் அந்த சூட்கேஸை திறந்து பார்த்தபோது, தலை துண்டிக்கப்பட்டு பல துண்டுகளாக வெட்டப்பட்ட நிலையில் பெண்ணின் உடல் இருப்பது கண்டறியப்பட்டது.

பின்னர், உயிரிழந்த பெண் ஹயாத்துன் நிஷா (38) என்பதும், அவர் ஒடிசா மாநிலத்தை சேர்ந்தவர் என்பதும் தெரியவந்தது. சென்னை சென்ட்ரல்ரெயில்நிலையத்தில் பதிவான CCTV காட்சிகளை போலீசார் ஆய்வு செய்ததில், அந்த சூட்கேஸை எடுத்துச் சென்ற ஒரு ஆண் மற்றும் ஒரு பெண்ணின் நடமாட்டம் கண்டறியப்பட்டது.

வழக்குப் பதிவு

தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட விசாரணையில்,கூடுவாஞ்சேரி மசூதி தெருவில் உள்ள வாடகை வீட்டிற்கு போலீசார் சென்றனர். அங்கு ஒரு பெரிய சமையல் பாத்திரத்தில் பெண்ணின் உடலின் மேலும் சில பாகங்கள் கண்டெடுக்கப்பட்டன.

இச்சம்பவம் தொடர்பாக T8 கூடுவாஞ்சேரி காவல் நிலையத்தில் முதலில் பெண் காணாமல் போனதாக வழக்குப் பதிவுசெய்யப்பட்டு,பின்னர் கொலை வழக்காக மாற்றம் செய்யப்பட்டது.

விசாரணையில், மாணிக் உத்தீன் லஸ்கர், த/பெ. மோனிருதீன் லஸ்கர், தக்ஷிண் கிருஷ்ணபூர், சோனாபரிகாட், கச்சார் மாவட்டம், அசாம் மாநிலம் மற்றும் அவரது மனைவி பகாபதி மாஜி, த/பெ. சோட்ரே மாஜி, ராத்பூர், கேந்துஜார், ஒடிசா 758016 ஆகியோர் சந்தேக நபர்களாக போலீசாரால் அடையாளம் காணப்பட்டனர். இதையடுத்து, தலைமறைவாக இருந்த தம்பதியரை கைது செய்ய போலீஸ் தனிப்படைகள் பல்வேறு இடங்களில் தேடுதல் மேற்கொண்டனர்.

கைது

29.08.2026 இன்று, குற்றம்சாட்டப்பட்ட மாணிக் உத்தீன் லஸ்கர் மற்றும் அவரது மனைவி பகாபதி மாஜி ஆகிய இருவரும் மணிப்பூர்மாநிலம்,ஜிரிபாம் மாவட்டம்,காஷிம்பூர் பகுதியில் கைது செய்யப்பட்டனர். அவர்களை Transit Warrant பெற்று தாம்பரத்திற்கு அழைத்து வர நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தகாத உறவின் காரணமாக கொலை நடந்துள்ளது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. நிஷா உடனான தொடர்பை மனைவி பகமதி மாஜி கண்டித்ததால் கொலை செய்ததாக தகவல் வெளியாகி உள்ளது.



ஈரோடு மாவட்டம் சித்தோடு ஸ்ரீ கஞ்சமலை சித்தர் சன்மார்க்க சங்கம் மற்றும் வீ த லீடர்ஸ் அமைப்பு , நேற்று (29.08.2026) ஈரோடு அரசு தலைமை மருத்துவமனை புறநோயாளிகளுக்கு அன்னதானம் வழங்கினர். இந்நிகழ்வில் சன்மார்க்க சங்க நிர்வாகிகள் செல்லதுரை, நந்தகுமார், சாமிநாதன், ரத்னாதேவி, கருப்பண்ணன், கல்யாணி, கிருஷ்ணா, பிரியங்கா,யுவராஜாஉள்ளிட்டோர்கலந்துகொண்டனர்.மேலும்,வீதலீடர்ஸ்அமைப்பின்தன்னார்வலர்கள்அண்ணாதுரை எனும் கௌசிகன், த.அ. சுபஸ்ரீ, பிரபு ஆகியோர் பங்கேற்று அன்னதானப் பணிகளை மேற்கொண்டனர்.

## ஓசூர் விமான நிலைய திட்டத்தை கைவிட அ.தி.மு.க. எம்.எல்.ஏ. வலியுறுத்தல்



சென்னை: ஓசூர் விமான நிலைய திட்டத்தை கைவிட வேண்டும் என அதிமுக எம்எல்ஏ பாலகிருஷ்ண ரெட்டி சட்டப்பேரவையில் வலியுறுத்தினார்.

சட்டப்பேரவையில் வீட்டுவசதித் துறை மானிய கோரிக்கை மீதான விவாதத்தில் பேசிய ஓசூர் எம்எல்ஏ பாலகிருஷ்ண - ரெட்டி(அதிமுக) பேசியதாவது:ஓசூர் தொகுதியின் விவசாயிகளின் முக்கியமானகோரிக்கை, ஓசூரில் விமான நிலையம் வேண்டாம்.

இது என்னுடைய குரல் அல்ல, விவசாயிகளின் குரல். விவசாயிகள் ஏற்கெனவே சிப்காட், சிட்கோ,தொழிற்சாலைகளுக்காக நிலத்தை கொடுத்துள்ளனர். மீதமுள்ள விவசாய நிலங்களை எடுத்தால் விவசாயம் பாதிக்கப்படும்.

ஓசூரில் ஏற்கெனவே தனியார்விமானநிலைய கட்டமைப்பு உள்ளது, அதை மேம்படுத்தி விரிவாக்கம் செய்ய வசதிகள் உள்ளன. பரந்தூர் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்றது போல், ஓசூர் விவசாயிகளின் குரலையும் கேளுங்கள்.

வளர்ச்சி திட்டங்களுக்கு நாங்கள் எதிரானவர்கள் அல்ல.ஆனால் விவசாயிகளின் நிலத்தை அழித்து வளர்ச்சி வேண்டாம். ஓசூர் விவசாயிகளின் உணர்வையும் கருத்தில் கொண்டு புதிய விமான நிலைய திட்டத்தை கைவிட வேண்டும்.

பெங்களூருவில் உள்ள தொழிற்சாலைகளில் இருந்து சுத்திகரிக்கப்படாத கழிவுகள் தென் பெண்ணை ஆற்றில் கலக்கிறது.இதனால் ஆற்றில் உள்ள மீன்கள் பாதிக்கப்படுகின்றன.இதுதவிர கேரட், நூக்கல், முள்ளங்கி போன்ற காய்கறிகளின் விளைச்சலும் பாதிக்கப்பட்டுள் ளது. மேலும் ஓசூரை தலை நகராக கொண்டு ஓசூர், சூளகிரி, தேன்கனிக் கோட்டை மற்றும் அஞ்செட்டி வட்டங்களை உள்ளடக்கி புதிய மாவட்டம் உருவாக்க வேண்டும்.

மேலும் பூ மார்க்கெட் அதிமுக ஆட்சி யில் கட்டப்பட்டு, கடந்த ஆட்சியில் கிடப்பில் போடப்பட்டுள்ளது, அதை உடனடியாக திறக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

இதனிடையே வருவாய் துறை அமைச்சர் செங்கோட்டையன் பேசுகையில், "எந்த வளர்ச்சி திட்டங்கள் கொண்டு வந்தாலும், அதற்கு விவசாய நிலங்களை தான் எடுத்தாக வேண்டும். வேறு வழியில்லை.ஓசூரில்விமான நிலையம் வரும் போது பெங்களூருவை விட அதிக வளர்ச்சி இருக்கும். ஓசூர் மக்களின் பொருளாதாரமும் வளரும்." என்றார்.

## Russian air attack on Ukraine's Kyiv kills at least 27, injures 42




*At least 27 people were killed and 42 others injured in an overnight Russian air attack on Ukraine's Kyiv, regional governor Tymur Tkachenko said on Saturday.*

*Tkachenko, writing on Telegram, said more than 380 people were being evacuated from the strike-hit area in the Bucha district. Tkachenko, also head of the regional military administration, said the overnight attack damaged at least 50 residential buildings.*

*The strikes also triggered a large fire that spread to several homes and a restaurant.*

*Ukrainian President Volodymyr Zelensky said a warehouse in the village of Myla was hit and that the strike was followed by an explosion.*

*Zelensky said authorities had launched criminal proceedings over alleged official negligence. He said ammunition should not have been stored near residential areas.*

*"There are regulations in place - ammunition cannot be stored near homes or other residential areas," Zelenskyy said.*

*The president added that a care facility for elderly people and people with disabilities was among the structures damaged in the attack, along with residential buildings. "More than 370 people have already been evacuated, and the evacuation is ongoing," he said. Earlier, a Russian drone strike triggered a major fire and explosions at a warehouse near Kyiv, Ukrainian authorities said on Saturday.*

*The strike hit the village of Myla in the Bucha district on Friday, according to the prosecutor's office. The attack came as Russia and Ukraine have intensified long-range strikes in recent months, with civilian infrastructure, including logistics warehouses, oil facilities and ports, increasingly coming under attack.*

*Tymur Tkachenko, head of the regional military administration, said a fire broke out at the site and was followed by multiple explosions.*

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.